**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 432/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திரு. தினேஷ் |
| Father's Name/Husband Name: | திரு. பொன்னுசாமி |
| Village : | ஆத்தூர் |
| Taluk : | ஆத்தூர் |
| Age : | 31/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 01.04.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 6, 10, 11 ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆத்தூர் கிராமத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. அ.சா.1யை யார் அடித்தார்கள் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 10.08.2021ம் தேதி காலை 4 மணியளவில் ஆஜர் எதிரிகள் அ.சா.1யை அவருடைய வீட்டிற்குள் அத்து மீறி உள்ளே நுழைந்து ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அ.சா.1யை இழுத்துக் கொண்டு வெளியே வந்து அங்கிருந்த கம்பத்தில் இரண்டு கைகளையும் பின்புறமாக வைத்து கருப்பு நைலான் கயிறால் கட்டி அ.சா.1யை கெட்டவார்த்தைகளால் திட்டியது பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரி செல்லம்மாள் அ.சா.1யை கெட்ட வார்த்தையால் திட்டி கொலை மிரட்டல்

விடுத்ததாகவும் எதிரிகள் சத்தியமூர்த்தி, தனபால், ரஞ்சித் மூன்று பேரும் அ.சா.1யை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதை நாள் கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.